# காலத்தின் கனவு!

**கடற்கரை கவியரங்கு - 596** 06-12-2020

அரிதாரம் பூசி ஆடுகின்ற கூட்டம்;
மேலான சிலகதைகள் சொல்லிவிட்டுப் போகும்!

பரிதாப மக்களுந்தான் பார்த்து,
உடல் வியர்த்து உண்மை என்று ஏகும்!

புரியாத வாழ்க்கையிதில்;
பொங்கிவரும், போராட்டம்;
பலகதைகள் சொல்லும்!

மரியாதை என்பதெல்லாம்,
மாயத்தோற்ற மென்பதை,
அறியபல காலம் ஆகும்!

சரித்திரமாய் உண்மையிதை,
மனம் சாற்றுங்கால்;
வாழ்நாளோ கழியும்!

**கவிவளவன்**